## அரசியல் விவகாரங்களுக்கான ஐக்கிய அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் மாண்புமிகு தோமஸ் ஏ. ஷென்னொன் அவர்ளுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் அவர்களினால் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட குறிப்புரைகள்

ஊடக நண்பர்களே!
அம்மணிகளே! கனவான்களே!

ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் தோமஸ் ஷென்னொன் அவர்களையும், அவருடைய பேராளர் குழுவையும் இன்று மாலையில் வரவேற்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

கடந்த இரண்டு மாதங்களில் இது எமது இரண்டாவது சந்திப்பு ஆகும். ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவை மாநாட்டின் பக்கவாட்டுச் சந்திப்பாக எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான பின்னிய செயல்விளைவு மற்றும் பங்குடைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அதிமேதகு ஜனாபதி அவர்களை அவர் செப்டம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் வருகை புரிந்த போது தூதுவர் ஷென்னொன் அவர்களும், நானும் நியூயோர்க்கில் சந்தித்தோம். நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அவர்களும் தமது வொஷிங்டன் டி.சி. க்கான விஜயத்தின் போது தூதுவர் ஷென்னொன் அவர்களை கடந்த மாதம் சந்தித்தார். செத்தெம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் அவர்களும், பல்தரப்பு பேராளர் குழுவும் வொஷிங்டனில் இருந்தனர். எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உச்சபட்டசமாக்கப்பட்ட பின்னிய செயல்விளைவு எல்லா மட்டங்களிலும் உண்மையில் மகிழ்ச்சியூட்டுவதாக அமைந்துள்ளது.

அம்மணிகளே! கனவான்களே!

உதவிச் செயலாளர் ஷென்னொன் அவர்கள் இலங்கைக்கும், எமது தலைவர்கள் அனைவருக்கும் மற்றும் உண்மையிலேயே உங்கள் அனைவருக்கும் அந்நியரல்லர்.

இது அவருடைய இலங்கைக்கான இரண்டாவது விஜயம் ஆகும். அவரது முதலாவது விஜயம் 2015 டிசம்பரில் இடப்பெற்றது. 2015 டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட அவருடைய முதலாவது விஜயத்தின் போது ஊடகத்துறையினருடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தார் என்பதுடன், அதில் முதலாவது ஐக்கிய அமெரிக்க - இலங்கை பங்குடைமை கலந்துரையாடலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டமையையும் நீங்கள் நினைவுகூர்வீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன். அந்த வகையில், கடந்த 2016ஆம் வருடத்தில் பெப்ரவரி மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கும், இலங்கைக்குமிடையிலான அறிமுக பங்குடைமை கலந்துரையாடல் வொஷிங்டன் டி.சி.யில் இடம்பெற்றபோது, அதனை மேற்பார்வை செய்தவர் தூதுவர் ஷென்னொன் அவர்களன்றி வேறெவருமில்லை.

இரண்டு நாடுகளினதும் அந்தந்த உத்தியோகத்தர்களுடன் இணைந்து தூதுவர் ஷென்னொன் அவர்களும், நானும் இரண்டாவது ஐக்கிய அமெரிக்க - இலங்கை பங்குடைமை கலந்துரையாடலை நடாத்தியுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் இன்று பெருமிதம் அடைகின்றேன்.

இது பல வழிகளிலும், எமது இரண்டு நாடுகளுக்குமான ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

- நீங்கள் அறிந்த வகையில், ஐக்கிய அமெரிக்காவும், இலங்கையும் பல தலைமுறைகளாக நண்பர்கள் ஆவர். எமது பின்னிய செயல்விளைவுகள் காரணமாக வணிகம், வர்த்தகம், மக்களுக்கு மக்களுக்கிடையிலான தொடர்பு, கல்வி மற்றும் கலாசாரத் துறைகளிலும், பாதுகாப்பு மற்றும் காவல் ஒருங்கிணைவு விடயங்களிலும் உள்ளடங்கலாக பல துறைகளில் நாங்கள் பாரியளவான நன்மைகளை அடைந்துள்ளோம். எமது இரண்டு ஜனநாயக நாடுகளும் களிப்புடன் வரவேற்கும் விடயங்களான நல்லாட்சி, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை வலுவூட்டுவதற்காக இலங்கை மக்களால் வாக்களிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேர்தலைத் தொடர்ந்து எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவு தீவிரமடைந்தது. இது,

எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை நிறுவன மற்றும் கட்டமைப்பு ரீதியில் கட்டியெழுப்புவதற்காக "பங்குடைமை கலந்துரையாடல்" என்ற பொறிமுறையை அமைப்பதற்கு இயலுமாக்கியதுடன், விரிவான விடயப்பரப்புக்களில் எமது ஒத்துழைப்புக்களை அதிகரிப்பதாகவும் அமைந்துள்ளது.

இன்றைய இரண்டாவது பங்குடைமை கலந்துரையாடலானது, ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான முக்கியமான பிரச்சினைகளையும், ஒத்துழைப்பிற்கான விடயங்களையும் விரிவான ரீதியில் கலந்துரையாடுவதற்கான இந்த முக்கியமானதும், பயனுள்ளதுமான ஒன்றிணைவு பொறிமுறையின் வலுப்படுத்தலை சுட்டிக்காட்டுகின்றது.

- தூதுவர் ஷென்னொன் அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சிரேஷ்ட - முக்கியமான ஐக்கிய அமெரிக்க உத்தியோகத்தர் ஆவார். அத்துடன், ஒருங்கிணைவு விடயங்களில் நிர்வாகத்தைச் சூழவுள்ள உறவுகளை உறுதியான அடிப்படையில் வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் ஐக்கிய அமெரிக்காவினதும், இலங்கையினதும் ஈடுபாடுகள் தொடர்பில், தூதுவர் ஷென்னொன் மற்றும் ஐக்கிய அமெரிக்க பிரதிநிதிகளுடனான எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான இரண்டாவது பங்குடைமை கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எமது கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, இந்த ஊடக பின்னிய செயல்விளைவிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில் உங்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும் கூட்டு அறிக்கையொன்றுக்கு நாங்கள் உடன்பட்டுள்ளோம். போதை, தீவிரவாதம் ஆகியவற்றுக்கு எதிரான சட்ட அமுலாக்கம், நிதி மற்றும் கடன் சார் சவால்களை எதிர்நோக்குவதற்கு உதவுதல், சட்டத்தின் ஆட்சியை வலுவூட்டுதல், வெளிப்படைத் தன்மை மற்றும் ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதார உதவிகள், இராணுவ ஒருங்கிணைவு போன்ற சில விடயங்கள் உள்ளடங்கலாக ஏராளமான விடயப்பரப்புக்களை ஐக்கிய அமெரிக்காவுக்கும், இலங்கைக்குமிடையிலான ஒத்துழைப்பு கொண்டுள்ளமையை நீங்கள் இந்த இணைந்த அறிக்கையில் வாசித்தறிய முடியும்.

உதவிச் செயலாளர் ஷென்னொன் அவர்கள், இவை தொடர்பான சில விடயங்களையும், அத்துடன் ஒத்துழைப்பு தொடர்பிலான புதிய விடங்கள் மற்றும் இலங்கைக்கான உதவி போன்றன தொடர்பிலும் தனது குறிப்புரைகளில் குறிப்பிடுவார்.

தூதுவர் ஷென்னொன் அவர்களே!

கடந்த 32 ஆண்டு காலங்களில் இலங்கைக்கு முதல் தடவையாக விஜயம் செய்யவுள்ள யு எஸ் எஸ் நிமிட்ஸ் கெரியர் ஸ்ட்ரைக் குழுமத்தின் ஐக்கிய அமெரிக்காவின் விமானத் தாங்கி கப்பலான யு எஸ் எஸ் நிமிட்ஸ் இன் விஜயத்தை அண்மித்ததாக உங்களுடைய விஜயம் அமைந்துள்ளது. கடந்த இரு வருடங்களில் அநேக கப்பல்கள் வருகை தந்துள்ளன. மேலும் ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் இலங்கையின் கடற்படையை நிறுவுவதற்கு உதவியுள்ளனர். இத்தகைய அபிவிருத்திகள் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், இருதரப்பு மற்றும் பிராந்திய மூலோபாயங்கள் மற்றும் பாதுகாப்பு நலன்களை பெற்றுக்கொள்வதற்காக இராணுவ ஒத்துழைப்பையும் அதிகரித்துக் கொள்ளவுள்ளோம்.

இந்திய பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு, நிலைபேற்றுநிலை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொருளாதார வாய்ப்பை மேம்படுத்தும் வகையிலான கூட்டு முயற்சிகளை அடைந்து கொள்வதற்கான ஐக்கிய அமெரிக்காவின் ஈடுபாட்டின் அடிப்படையில், இலங்கையில் நடைபெற்ற இந்து சமுத்திரப் பிராந்திய மாநாட்டில் ஓகத்து - செத்தெம்பர் மாதங்களில் பதில் உதவி செயலாளரான வெல்ஸ் பங்குபற்றியிருந்தமை எம்மை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

அம்மணிகளே! கனவான்களே!

தூதுவர் ஷென்னொன்; அவர்களின் இம்முறை விஜயம் மிகவும் குறுகிய காலமாகும். இன்று மாலை வருகை தந்துள்ள அவர் நாளைய தினம் காலை மீண்டும் புறப்படவுள்ளார். சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுடனான கலந்துரையாடல்களை தவிர, மாண்புமிகு

பிரதம அமைச்சர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோரை மரியாதை நிமித்தம் அவர் சந்திக்கவுள்ளார்.

உதவிச் செயலாளர் ஷென்னொன் அவர்களே!

உங்களுடைய இந்த விஜயம் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், உங்களின் இலங்கைக்கான அடுத்தமுறை விஜயம் நீண்டதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் எமது இருதரப்பு தொடர்புகளை மேம்படுத்துவது நோக்கியும், பரஸ்பர கரிசணைப் பிரிவுகளில் ஈடுபாடுகளை மேம்படுத்துவது நோக்கி இருநாடுகளுமே பணியாற்றி வருவதன் காரணமாக எதிர்வரும் நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்களில் உங்களுடன் ஈடுபட்டிருப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நிர்வாகங்கள் முழுவதும் ஐக்கிய அமெரிக்கா - இலங்கை உறவுகளை ஊக்குவிப்பதில் உங்களது தலைமைத்துவத்திற்கும், அண்மைக்காலம் வரை வொஷிங்டனில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவரான எனது திறனை தனிப்பட்ட ரீதியில் மேம்படுத்த நீங்கள் அளித்த ஆதரவிற்கும் கட்டாயம் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒவ்வொருநாளும் எமது இருநாடுகளுக்குமிடையோன தொடர்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் எம்மோடு நெருங்கிப் பணியாற்றிய கொழும்பிலுள்ள தூதுவர் அதுல்கேஷப் மற்றும் அவரது குழுவினரின் அயராத முயற்சிகளுக்கு எனது பாராட்டுக்களை இச் சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

தற்போது உங்கள் மத்தியில் உரையாடுவதற்கு தூதுவர் ஷென்னொன் அவர்களை அழைப்பதுடன், இவ் உரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களிடமிருந்து இரு கேள்விகள் வீதம் இருவரும் பெறவுள்ளோம்.